BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகரின் அடுத்த மைல்கல்லாக விளங்குகின்ற மின்சார பேருந்துகள் மே மாதம் 4 ஆம் தேதி முதல் சாலைகளில் ஓடத்துவங்கும்

ப்ராம்ப்ட்டன், ON (May 3, 2021) – மே மாதம் 4 ஆம் தேதி முதல் பேட்டரியினால் இயங்குகின்ற மின்சார பேருந்துகள் (BEBs), ப்ராம்ப்ட்டன் நகர சாலைகளில் ஓடத் துவங்கும் என ப்ராம்ப்ட்டன் நகர சபையின் சார்பாக, நகர மேயர் பேட்ரிக் ப்ரவுன் அவர்கள் இன்றைய தினம் அறிவித்தார்.

பான்-கனடியன் BEB செயல்முறை விளக்கம் மற்றும் ஒருங்கிணைப்பு சோதனை (Pan-Canadian BEB Demonstration and Integration Trial) யின் ஒரு பகுதியாக, இயல்தரம் கொண்ட மற்றும் முழுக்க முழுக்க பரஸ்பரம் இயக்கக்கூடிய BEB க்கள் மற்றும் உயர் ஆற்றல் கொண்ட, தலைக்கு மேலான, வழி முழுதுமாக மின்சக்தியூட்டும் கட்டமைப்புகள் கொண்ட, பேருந்துகளுக்கான உள்கட்டமைப்பு இதுவாகும்; இன்றைய தேதிக்கு உலகளாவிய வகையில் மிகப்பெரிய அளவில் தனியொரு பிரயோகிப்பு இதுவேயாகும்.

உலகிலேயே முதலாவதாக, ப்ராம்ப்ட்டன் நகரம் ட்ரான்ஸ்லின்க் (TransLink) மற்றும் யார்க் ரீஜன் ட்ரான்ஸிட் (York Region Transit) ஆகிய பேருந்து போக்குவரத்து அமைப்புக்களுடன் இணைகிறது; நோவா பஸ், நியூ ஃப்ளையர் இண்டஸ்ட்ரீஸ், ஏபிபி இன்க்., சீமென்ஸ் கனடா மற்றும் நியூமார்க்கெட்-ட்டே பவர் டிஸ்டிரிபியூஷன் லிமிடெட் (Nova Bus, New Flyer Industries, ABB Inc., Siemens Canada, மற்றும் Newmarket-Tay Power Distribution Ltd) ஆகியவற்றுடன் கூட்டு சேர்ந்து, பல நகரங்களிலும் பரஸ்பரம் இயக்கக்கூடிய வகையில் முழுமையாக போக்குவரத்துக்கென சாலையில் ஓடவிடப்பட்ட பேருந்துகள் மற்றும் சார்ஜிங் (மின்சக்தியூட்டம் பெற்றுக்கொள்ளும்) அமைப்புகளில் ப்ராம்ப்ட்டன் இணைகிறது. இந்த திட்டத்தை, கனடிய புற நகர் போக்குவரத்து ஆராய்ச்சி மற்றும் புதுமை படைக்கும் கூட்டமைப்பு (CUTRIC) 2017 இல் அறிமுகப்படுத்தியது. வெவ்வேறு உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் சார்ஜிங் அமைப்புக்களை பரஸ்பரம் இணைத்து முழுமையாக இயக்கக்கூடிய வடிவத்தைப் பயன்படுத்தலாம்; அதாவது அவற்றை ஒன்றுடன் வேறொன்றை இணைத்தாலும்கூட சார்ஜ் செய்யும் உள்கட்டமைப்பைப் கொண்டவை; மேலும் இதன் வகையில் இதுவே உலக அளவில் முதன்முதலானதாகும்.

ப்ராம்ப்ட்டனில் செய்யப்பட்ட இந்த பிரயோகிப்பானது, பிற நகரங்களில் பிரயோகம் செய்யப்பட்டதிலிருந்து வேறுபடுகிறது, அங்கெல்லாம் பேருந்துகள் அவற்றுக்கென நியமிக்கப்பட்ட சார்ஜிங் டிப்போ(பணிமனை)க்களில் மட்டுமே மின்சக்தியூட்டம் பெற முடியும். ப்ராம்ப்ட்டனின் பணிமனை மற்றும் சாலைப்புறம் ஆகிய இரு வகையிலும் மின்சக்தியூட்டும் (சார்ஜிங்) விருப்பத்தெரிவுகள்

கிடைக்கின்றது; இதனால் மின்சார பேருந்துகள் ஒருநாளில் அதிக தூரம் ஓட்டம் செய்ய உதவிகரமாக இருக்கின்றது.

திருப்புமுனை ஏற்படுத்திய இந்த மின்சாரப் பேருந்து தொழில்நுட்பமானது, பேருந்து புகை உமிழும் குழாய்களில் புகை உமிழ்வை முற்றிலும் இல்லாதபடி செய்து, காற்று மாசுபடுவதைக் குறைக்கும். பேருந்துகள் அவற்றின் இயக்க காலம் முழுவதுமாக பூஜ்ஜியம் உமிழ்வு எனும் நிலையைக் கொண்டிருக்கும்; இது டீசல் மற்றும் அதற்கு நிகரான எரிசக்திப் பொருட்களின் உமிழ்வுகளுடன் ஒப்பிடுகையில் மிக மிகக் குறைவே ஆகும். ஒவ்வொரு பேருந்தும் 10 நிமிடங்களுக்குள் முழுமையாக மின்சக்தி ஏற்றிக்கொள்ள முடியும்.

ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து அமைப்பானது அதன் தொகுப்பில் எட்டு BEB களையும், நோவா பஸ் (Nova Bus )ஸிலிருந்து இரண்டு மற்றும் நியூ ஃப்ளையரில் (New Flyer) இருந்து ஆறு பேருந்துகளையும் சேர்க்கும். மே மாதம் 4 ஆம் தேதி பிஇபி(BEB) க்கள் சேவையில் அறிமுகப்படுத்தப்படும்; இதன் படி, தடம் எண் 26 இல் மவுண்ட் ப்ளெசண்ட்-லிருந்து தொடங்கிவைக்கப்படும்; அதைத் தொடர்ந்து தடம் எண் 23 இல் சாண்டல்வுட் இல் துவக்கப்படும். மவுண்ட் ப்ளெசண்ட் வில்லேஜ் டெர்மினல், குயின் ஸ்ட்ரீட் / ஹைவே 50 ஜூம் நிலையம் மற்றும் சாண்டல்வுட் பேருந்து போக்குவரத்து வசதி, ஏபிபி இன்க் (ABB Inc) நிறுவனம் ஆகிய **மூன்று**, மற்றும் சீமென்ஸ் கனடா லிமிடெட் நிறுவனங்களில் **ஒன்று** என, **நான்கு** உயர் ஆற்றல் கொண்ட (450 கிலோவாட்) மேல்நிலை பாண்டோகிராப் ஆன்-ரூட் சார்ஜிங் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

ப்ராம்ப்ட்டன் திட்டப்பணியின் காலம் முழுக்கவுமாக, அனைத்து BEB க்களும் சார்ஜர்களும் புதிய பிராண்டிங் வடிவமைப்பைக் கொண்டிருக்கும், இது மீதமுள்ள பேருந்து தொகுப்புகளில் இருந்து வேறுபட்டு, தனித்துவமானது.

**பின்புலம்**

2109 ஆம் ஆண்டில், இந்த முதலாவது முன்னணி திட்டப்பணியின் முதல் கட்டத்திற்காக $11.15 மில்லியன் டாலர் தொகையை ஒதுக்குவதாக அப்போதைய சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான அமைச்சராக இருந்த மேதகு கேத்தரீன் மெக்கென்னா அறிவித்தார்
இந்த திட்டத்திற்கு மொத்தமாக $16 மில்லியன் செலவாகும் என கணிக்கப்பட்டது. கூட்டாட்சி அரசின் நிதியானது கனடா நாட்டின் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை அமைப்பின் லோ-கார்பன் எகனாமி ஃபண்ட் (Low Carbon Economy Fund) மற்றும் கனடாவின் தேசிய ஆதாரவளங்களுக்கான அமைப்பின் க்ரீன் இன்ஃப்ராஸ்ட்ரக்ச்சர் –மின்சார வாகன உள்கட்டுமான செயல்முறை விளக்க நிகழ்ச்சித்திட்டம் (Green Infrastructure – Electric Vehicle Infrastructure Demonstration Program) மூலமாக வழங்கப்பட்டது.

நகரத்தின் ஒட்டுமொத்த கார்பன் உமிழ்வுக்கான தடம் பதிப்பது மற்றும் கிரீன்ஹவுஸ் வாயு (ஜிஹெச்ஜி) உமிழ்வைக் குறைக்கும் வகையிலான உயர்தர சேவையை வழங்கவும், புதிய மற்றும் புதுமை படைக்கும்படியான தீர்வுகளை வழங்கவும் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து அமைப்பு உறுதிபூண்டுள்ளது; இதில் 133 டீசல்-எலக்ட்ரிக் ஹைப்ரிட் ஜூம் விரைவுப் பேருந்து தொகுப்பு உட்பட ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து அமைப்பில் தற்போது 450 பேருந்துகளை அதன் பேருந்து தொகுப்பின் மூலம் இயக்குகிறது.

**அறிஞர் கூற்றுக்கள்**

“மே மாதம் 4 ஆம் தேதி முதல் ப்ராம்ப்ட்டனின் சாலைகளில் மின்சார பேருந்துகள் ஓடத் துவங்கும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ப்ராம்ப்ட்டன் ஒரு பசுமை நகரமாகும், இது எங்கள் சமூகத்தின் நிலைத்திருக்கும் தன்மைக்கான குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும். ப்ராம்ப்ட்டனில் பான்-கனடியன் பேட்டரி எலக்ட்ரிக் பேருந்து செயல்முறை விளக்கம் மற்றும் ஒருங்கிணைப்பு சோதனைக்கான (Pan-Canadian Battery Electric Bus Demonstration and Integration Trial) புதுமை படைத்தலில் எங்கள் திட்டப்பணியில் இருக்கின்ற பங்காளிகள் மற்றும் தலைவர்கள், CUTRIC உடன் சேர்ந்து ஒத்துழைப்பதில் பெருமிதம் கொள்கிறோம். இதுவே உலகளாவ முதல் முதலான திட்டமாகும்; இது எங்கள் பேருந்து போக்குவரத்து வலையமைப்பை மேலும் மேம்படுத்தும், இதுவே கனடாவில் வேகமாக வளர்ந்து வரும் போக்குவரத்து வலையமைப்புமாகும் . ”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

” இந்த பிரயோகிப்பானது, கனடா நாட்டினை, மின்சாரப் பேருந்து புதுமை படைப்புக்களுக்கான மையமாக மாற்றுகிறது. இந்த ஆண்டில், ப்ராம்ப்ட்டனில் பான்-கனடியன் பேட்டரி எலக்ட்ரிக் பேருந்து செயல்முறை விளக்கம் மற்றும் ஒருங்கிணைப்புக்கான சோதனையுடன் (Pan-Canadian Battery Electric Bus Demonstration and Integration Trial) சேர்ந்து, ப்ராம்ப்ட்டன் நகரில் வெற்றிகரமாக பிரயோகப்படுத்தியது பல வகையிலும் உதவிகரமாக இருக்கின்றது; பேருந்து போக்குவரத்து ஏஜென்சிகள், நகரங்கள் மற்றும் மத்திய அரசு ஆகியவை பலவகைகளிலிருந்து லாபம் எடுக்க அனுமதிக்கிறது; இதன் மூலம் அவர்களின் முதலீடு செய்த பணத்திற்கு, ஒன்றிணைந்து செயல்படும் போட்டியாளர்கள் மத்தியில் என்ன வேண்டுமோ அதை மீட்டு எடுப்பதை உறுதிப்படுத்த உதவுகிறது. இந்த திட்டமானது முழு தொழிற்துறையையும் பரஸ்பரம் ஒன்றுடன் வேறொன்று இயங்கக்கூடிய தன்மை மற்றும் தரப்படுத்தலை நோக்கி திருப்பி விட்டுள்ளது. வரி செலுத்துவோருக்கும் போக்குவரத்தை பயன்படுத்துவோருக்கும் இது ஒரு நல்ல செய்தியாகும். இந்த திட்டம் புதிய குறைந்த கார்பன் உமிழ்வுக்கான தொழில்நுட்ப வேலை வாய்ப்புக்களையும் உருவாக்கி, ப்ராம்ப்ட்டன், ஒன்ட்டேரியோ மற்றும் கனடாவில் உள்ள முக்கிய நிறுவனங்கள் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்க்க உதவுகிறது; முன்னெப்போதையும் விட, COVID-19 தொற்றுநோயால் ஏற்பட்ட தாக்கங்கலிருந்து நாம் மீளும் இந்தச் சமயத்தில் இது முக்கியமானது. "

- *ஜோஸிப்பா பெட்ரூனிக், CUTRIC வின் தலைவர், மற்றும் தலைமை செயல் அதிகாரி (CEO)*

”நமது நகரத்தில் கார்பன் தடம் பதிவதைக் குறைக்க ப்ராம்ப்ட்டன் நகர சபை அர்ப்பணிப்பு கொண்டுள்ளது. 2050 ஆம் ஆண்டிற்குள் ப்ராம்ப்ட்டனில் உருவாகும் கிரீன்ஹவுஸ் வாயு உமிழ்வை 80 சதவிகிதம் அளவுக்கு குறைப்பதற்கான பயணத்தில் நாங்கள் இருக்கிறோம். ப்ராம்ப்ட்டனில் ஆரம்ப கட்ட முதலே மின்சார பேருந்துகளில் பயணம் செய்வதையே குறிக்கோளாக வைத்திருக்க அனைவரையும் நான் ஊக்குவிக்கிறேன்; ஒரு பேருந்தில் ஆண்டுக்கு சுமார் 235 டன் அளவிலான கார்பன் (CO2) தடம் பதியாமல் செய்யும்! ”

- *பால் விசெண்ட், பிராந்திய கவுன்சிலர் வார்டுகள்* 1 & 5; *தலைமைப் பொறுப்பு*, *பொதுப்பணிகள் மற்றும் பொறியியல் துறை, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“எங்கள் நகரத்திற்கான புதுப்பிக்கப்பட்ட ப்ராம்ப்ட்டன் பசுமை வளர்ப்பு சுற்றுச்சூழலுக்கான மாஸ்டர் திட்டத்திற்கு ப்ராம்ப்ட்டன் நகர சபை சமீபத்தில் ஒப்புதல் அளித்தது; மேலும் இந்த மின்சார பேருந்துகள் ப்ராம்ப்ட்டனை ஒரு பசுமையான நகரமாக ஆக்குவதற்கான இந்த பணியை ஆதரிக்கின்றன. ப்ராம்ப்ட்டனில் பான்-கனடியன் பேட்டரி எலக்ட்ரிக் பேருந்து செயல்முறை விளக்கம் மற்றும் ஒருங்கிணைப்புக்கான சோதனையானது (Pan-Canadian Battery Electric Bus Demonstration and Integration Trial), உலகளாவிய காலநிலை மாற்றத்திற்கான எங்கள் பங்களிப்புகளைக் குறைக்க உதவும், மற்றும் நிலைத்திருக்கும் தன்மைக்கான முயற்சிகளை வழிநடத்துவதில் பிற நகராட்சிகளை ஊக்குவிக்கும்.”

- *டக் வில்லன்ஸ், நகர கவுன்சிலர் வார்டுகள்* 2 & 6; *உறுப்பினர்*, *சுற்றுச்சூழல் ஆலோசனைக்குழு*; *உறுப்பினர்,* CEERP *சமுதாயப்பணி*, *ப்ராம்ப்ட்டன் நகரம்*

“நிலைத்திருக்கும் தன்மையில் ப்ராம்ப்ட்டன் நகரம் ஒரு முன்னணி நகரமாகும்; இதுவே ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து தொகுப்பை மின்மயமாக்குவதற்கான முதல் படியாகும். பேருந்துபோக்குவரத்து மற்றும் செயல்பாடுமிக்க பேருந்து போக்குவரத்து வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கும், ஆற்றல் செயல்திறனில் கவனம் செலுத்துவதற்கும், புதுமையான தொழில்நுட்பங்களை ப்ராம்ப்ட்டனுக்கு கொண்டு வருவதற்கும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். ”

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“கனடிய நாட்டு மக்கள் தாங்கள் செல்ல வேண்டிய இடத்திற்குச் செல்வதற்கு பசுமையான விருப்பங்களைத் தேடுகிறார்கள், அதனால்தான் நாங்கள் அவர்களுக்கு இதைத் தருகிறோம். ப்ராம்ப்ட்டன் நகரின் மின்சார பேருந்துகளுக்கான பைலட் திட்டமானது, புதுமை படைக்கும் வகையிலான தூய்மையான தொழில்நுட்ப தீர்வுகளுக்கு ஒரு எடுத்துக்காட்டு ஆகும், மொத்தத்தில் இது, பூஜ்ஜியம் உமிழ்வினை அடைய நமக்கு உதவும். ”

*-மேதகு சீமுஸ் ஓ’ரீகன் ஜுனியர், இயற்கை வளங்களுக்கான அமைச்சர்*

“ப்ராம்ப்ட்டனில் வசிப்பவர்களுக்கு விரைவான, தூய்மையான மற்றும் குறைந்த செலவிலான முறைகளில், முற்றிலும் உமிழ்வுகள் செய்யாத பேருந்துகளில் பயணம் செய்ய வைப்பதே எங்கள் முதலீட்டின் குறிக்கோள் ஆகும். இன்றைய துவக்கமானது, 2050 ஆம் ஆண்டில் உமிழ்வுகளை 80 சதவிகிதம் அளவிற்கு குறைப்பதற்கான ப்ராம்ப்ட்டனின் லட்சிய இலக்கை நோக்கி செல்வதில் நாம் கடக்க இருக்கும் ஒரு முக்கியமான மைல்கல் ஆகும்; வரும் 5 ஆண்டுகளில் முற்றிலும் உமிழ்வு இல்லாத 5,000 பேருந்துகளைச் சேர்ப்பதற்கான நமது அரசாங்கத்தின் உறுதிப்பாடும் இதுவேயாகும். இது கனடிய நாட்டு மக்களுக்கான வேலைவாய்ப்புக்கள் உருவாக ஆதரவளிக்கும், காலநிலை மாற்றத்தை சமாளிக்கும், மேலும் தூய்மையான, அனைவரையும் உள்ளடக்கிய சமூகங்களையும் உருவாக்கும். ”

- *மேதகு கேத்தரீன் மெக்கெனா, உள்கட்டுமானம் மற்றும் சமுதாயங்களுக்கான அமைச்சர்*

“கனடா நாட்டின் போக்குவரத்துத் துறையை மின்மயமாக்குவது என்பது, பெரும் பொருளாதார வாய்ப்புகளை வழங்குகிறது; அதே சமயத்தில் 2050 ஆம் ஆண்டு வாக்கில் முற்றிலும் உமிழ்வு இல்லாத நிலை நோக்கி நாம் செல்லும்போது தூய்மையான காற்று கிடைக்கவும் மற்றும் கார்பன் உமிழ்வைக் குறைக்கவும் உதவுகிறது. கூட்டமைப்பு அரசின் ஆதரவுடன் ப்ராம்ப்ட்டன் நகரம் பளிச்சென தெரிகின்ற தடத்தை விட்டுச் செல்கிறது; மேலும் குறைந்த கார்பன் உமிழ்வு கொண்ட பொருளாதாரத்திற்கு மாறிகொள்வதன் நடைமுறைப் பலன்கள் ஏற்கனவே இங்கே உள்ளன என்றும் கனடா நாட்டு மக்களுக்கு காட்டுகிறது. "

- *மேதகு ஜோனாதன் வில்கின்சன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான அமைச்சர்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ப்ராம்ப்ட்டன் நகர ஊடகத் தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கினைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca

**கனடாவின் இயற்கை வளங்களுக்கான ஊடக தொடர்பு**
343-292-6100
nrcan.media.rncan@canada.ca

**இயற்கை வளங்களுக்கான அமைச்சர் அலுவலகத்தின் ஊடக தொடர்பு**
இயான் கேமரான்
பத்திரிக்கை செயலர்
613-447-3488
Ian.Cameron@canada.ca

**CUTRIC ஊடக தொடர்பு**
கரேஸ் ரெய்ல்லி
அரசு & பொதுமக்கள் தொடர்பு அதிகாரி ·
514.244.3244
grace.reilly@cutric-crituc.org